வசதிகள். தேவைகளைச் செய்ய, அதாவது கண்ணாடி பதித்தல், கூடுதலான மின் விசிறிகள், மின் விளக்குகள் அமைத்தல், ஓய்வூதியம் பெறுபவர்கள் அமருவதற்கான தனிக் கூடம் அமைத்தல், தண்ணீர் வசதியுடன் கழிப்பறை கட்டுதல் கேஸ் கவுண்டர் பழுது பார்த்தல், புதிய ஓடுகள் போட்டு, அவற்றில் வெளிச்சம் வருவதற்காக கண்ணாடிகள் பதித்தல், மற்றும் பாதுகாப்பு அறையைச் சுற்றிலும் உள்ள சுவற்றைப் பழுது பார்த்தல் போன்ற பழுது பார்க்கும் பணிகள் ரூ. 1,80,000 மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அதிலே கழிப்பறை கட்டுவதைத் தவிர மற்றைய பணிகள் 1992-93 இறுதிக்குள் செய்து முடிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. கழிப்பறை கட்டுவது என்பது 1993-94 ஆம் ஆண்டு இரண்டாவது பகுதித் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மற்றவைகள் இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுக்கு இதற்காக என்னுடைய உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதி ஆண்டில் பட்ஜெட்டில் அதை எடுத்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள்ளேயே செய்து முடிக்கப்பட்டுவிடும். கழிப்பறை கட்டுவது மட்டும் 1993-94ல் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

64—

இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டிற்கு நில வரியைத் தள்ளுபடி செய்தல்.

11730 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு முழுமையாக மழையே இல்லாததாலும், விவசாயமும் முழுமையாக நடைபெறாததாலும், இந்த விவசாய ஆண்டில் நிலவரி தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

1993 பிப்ரவரி 12]

முற்பகல் 10-10.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

காமராசர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் உட்பட அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 6 வட்டங்களில் 1401-வது பசலியில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1991-92 ஆம் வருடத்தில் நிலவரிக்கு வறட்சியின் காரணமாக காமராசர் மாவட்டத்திற்கு எச்சம்ஷன் கொடுத்து இருப்பதை அறிந்து என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் மாவட்டம் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான அரசுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த வருடத்தில் அதாவது 1992-93 ஆம் வருடத்தில் கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் அதிகமாக மழை பெய்து குளங்கள் எல்லாம் நிரம்பி இருந்தாலும், குறிப்பாக காமராசர் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 60 சதவீதம் டேங்குகள் தான் நிரம்பி இருக்கின்றன. (குறுக்கீடுகள்) 40 சதவீத கண்மாய்கள் முழுவதுமாக நிரம்பவில்லை. ஆகையினால், காமராசர் மாவட்டத்தில் 1992-93 ஆம் வருடத்தில் ஏறத்தாழ 860 மில்லி மீட்டர் மழைதான் பெய்து இருக்கிறது. 1992-93-வது ஆண்டில், கடந்த வருடத்தைவிட இந்த ஆண்டு அதாவது 1992-93-ல் 60 மில்லி மீட்டர் மழை அளவு குறைவாகவே உள்ளது. எனவே இந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இந்த நிலவரி எச்சம்ஷன் 1992-93 ஆம் ஆண்டில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 48 இலட்சத்து 57 ஆயிரத்து 940 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. அதேபோன்று வறட்சியாக இருந்த 1991-92 ஆம் ஆண்டில் காமராசர் மாவட்டம், பசும்பொன் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் 181.79 இலட்சம் அதாவது 1.82 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு அதே போல் பல இடங்களிலிருந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற கணக்குகளும், காமராசர் மாவட்டத்தில் இருந்து வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற கணக்குகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கோரப்பட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு அதன் மீது அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 பிப்ரவரி 12

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

65—

காட்டுமன்னார்கோயிலில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம்

*10585— திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டு மன்னார்கோயிலில் ஒரு பெண்கள் கல்லூரியினை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பெண்கள் மேல் நிலைப் பள்ளியை மையமாகக் கொண்டு ஏறத்தாழ 10 மேல் நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கே கல்வி பயிலும் மாணவிகள், பெண்கள் கல்லூரியில் போய்ச் சேர வேண்டுமானால் அவர்கள் கும்பகோணத்திற்குத் தான் போய்ச்சேர வேண்டும்; அது ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே கல்வி பயிலச் செல்லும் மாணவிகளுக்கு போதிய இட வசதி தரப்படுவதில்லை. மேலும் அவர்கள் விரும்புகின்ற பாடங்கள் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அங்கே இதுபோன்று அவதிப்படும் பொதுமக்களினுடைய குறைகளைப் போக்கும் பொருட்டு, அவர்கள் ஒரு நீண்ட கால கோரிக்கையாக அங்கே பெண்கள் கல்லூரி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மீண்டும் அதை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.